بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *01/12/2023* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪ போர் நிலையில் ஈருலக அரசர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி**

**✪ பாலஸ்தீனத்து அப்பாவிகளுக்காக துஆக்களுக்கான தொடர் வலியுறுத்தல்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே கலந்து கொண்ட யுத்தங்கள் தொடர்பாக சில விஷயங்களைக் கூறுவேன். அன்னாருடைய ஆளுமையின் அம்சம் மற்றும் இந்த சூழ்நிலையில் ஹுஸூர் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரி எவ்வாறு நமக்கு முன் வருகின்றது என்பது பற்றி கூறுவேன்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் எவ்வாறு சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தந்தார்கள் என்பதை பத்ர் யுத்தம் தொடர்பாக நாம் பார்த்து விட்டோம். சிறைபிடிக்கப்பட்டவர்கள் தாங்களே கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப சஹாபா தாங்கள் உண்பதை விடச் சிறந்த உணவை எங்களுக்கு வழங்கி வந்தார்கள். எவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமோ அவர்கள் முஸ்லிம்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தால் போதும் என்ற அளவுக்கே சிலருக்கான ஈட்டுத் தொகை இருந்தது.

இவையனைத்தும் நிகழ்ந்ததற்கான காரணம், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எவருடனும் தனிப்பட்ட பகைமை இருக்கவில்லை. மாறாக, அது அல்லாஹ்வின் மார்க்கத்தை அழிக்க முயன்றவர்களுக்கு எதிரான போராக இருந்தது. சிலர் தங்களுடைய நிர்பந்தம் காரணமாக எதிரிகள் தரப்பிலிருந்து கலந்து கொண்டனர். அவர்கள் முஸ்லிம்களுடன் போரிட விரும்பவில்லை. அவர்களுக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் பல வசதிகளை ஏற்படுத்தித் தந்தார்கள். இவர்களில் சிலர் முஸ்லிம்களாகவும் ஆகி விட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போருக்கான சட்ட திட்டங்களையும் வகுத்தார்கள். உடன்படிக்கைகளையும் பேணிக் காத்தார்கள். மேலும், இந்த விஷயங்கள்படி உச்சகட்ட தரத்தில் அமலும் செய்தார்கள்.

இன்றைய காலத்து உலகத்தைப் போன்று எண்ணற்ற சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டு, எதன்படியும் செயல்படாமல், இரட்டை நிலைபாடு மேற்கொள்வது போன்று இருக்கவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை திருக்குர்ஆனின் கட்டளைகளின் செயல் வடிவ விளக்கவுரையாக இருந்தது. அதில் நீதி, நேர்மை மற்றும் அமைதியை நிலைநாட்டுதல் ஆகியவை அடிப்படை விதிகளாகக் கூறப்பட்டுள்ளன. அல்லாஹ் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறான்:

يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ لِلّٰهِ شُهَدَآءَ بِالْقِسْطِ ۫ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰٓى

اَلَّا تَعْدِلُوْا ؕ اِعْدِلُوْا ۟ هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى ۫ وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ

பொருள்: ‘நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக உறுதியாக கண்காணித்தவாறு நேர்மைக்கு ஆதரவாக சாட்சி கூறுபவர்களாக ஆகி விடுங்கள். மேலும், எந்த சமுதாயத்தின் பகைமையும், உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம்; நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இது இறையச்சத்திற்கு எல்லாவற்றையும் விட மிக நெருங்கியது. மேலும், அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்று அறிகின்றான்.’ (திருக்குர்ஆன் 5:9)

ஆக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி இந்தப் போதனையின் ஒளியில் எல்லா அம்சங்களையும் சூழ்ந்துள்ளதாகவும், இதன் உயர்தரத்தை நிலைநாட்டக் கூடியதாகவும் இருந்தது.

இன்று உஹது யுத்தம் தொடர்பாக சில விஷயங்களைக் எடுத்துக் கூறுவேன். நிகழ்வுகள் நிரூபிப்பதற்கு ஏற்ப, இந்த யுத்தத்தையும் எதிரிகள் தங்களுடைய பகைமைத் தீயின் காரணமாக துவக்கியிருந்தனர். வேறுவழியின்றி முஸ்லிம்களுக்கும் யுத்தத்திற்காகப் புறப்பட நேரிட்டது. இந்த யுத்தம் பெரும் பத்ர் யுத்தத்திற்கு ஓராண்டுக்குப் பிறகு, ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் சனிக்கிழமை அன்று துவங்கியது. வரலாற்றாசிரியர்களும் வாழ்க்கை வரலாறு எழுதுபவர்களும், உஹது யுத்தம் ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு நிகழ்ந்தது என்பதில் கருத்தொருமித்திருக்கிறார்கள். எனினும், ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு நடைபெற்றதாகவும் ஓர் அறிவிப்பு உள்ளது. அதிகப்படியாக ஷவ்வால் 7 ஆம் தேதியும் 15 ஆம் தேதியும் கூறப்படுகின்றன.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா முனவ்வராவில் இருந்து, ஜுமுஆ அன்று அஸ்ர் தொழுகைக்குப் பிறகு புறப்பட்டார்கள். சனிக்கிழமை அன்று சூரியன் உதிப்பதற்கு முன் உஹது மைதானத்தை அடைந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீனில் உஹது யுத்தம் ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் 15 ஆம் தேதி, கி.பி.624 ஆம் ஆண்டு, மார்ச் 31 ஆம் தேதி சனிக்கிழமை அன்று நடந்தது என எழுதியுள்ளார்கள்.

இந்த யுத்தம் நடைபெற்றதற்கான காரணம் யாதெனில், பத்ர் யுத்தத்தில் குறைஷியர்களுக்கு பாடம் கற்றுக் கொடுக்கும் தோல்வி கிடைத்ததும், குறைஷிகளில் முன்னணி வகிக்கும் மக்களில், உதாரணமாக, அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆ, இக்ரிமா பின் அபீ ஜஹ்ல், ஸஃப்வான் பின் உமையா மற்றும் சில முன்னணி வகிப்பவர்கள் அபூ சுஃப்யானிடம் வந்தார்கள். பத்ர் யுத்தத்திற்குக் காரணமாக அமைந்த அந்த வியாபாரக் குழுவில் இவர்களுடைய செல்வங்கள் இருந்தன. இந்த செல்வம் மக்காவுக்குக் கொண்டு வரப்பட்டு தாருன் நத்வாவில் வைக்கப்பட்டு விட்டது. அவர்கள் அபூ சுஃப்யானிடம் கூறினார்கள்:

முஹம்மது {(ஸல்) அவர்கள்} நம்முடைய எண்ணற்ற மக்களைக் கொன்று விட்டார். எனவே, இந்த வியாபாரச் செல்வத்திலிருந்து அவர்களுடன் போரிட ஆயத்தம் மேற்கொள்ளுங்கள். ஒருவேளை கொலையுண்ட நம்முடைய மக்களுக்காக நாம் பழிவாங்கி விடலாம். மேலும், 'இந்த வியாபாரச் செல்வத்தின் இலாபத்திலிருந்து ஒரு படை தயார் செய்யப்படுவதற்கு நாங்கள் மகிழ்ச்சியுடன் ஆயத்தமாக இருக்கிறோம்.

இவர்களுடைய ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. குறைஷியர்கள், செல்வத்திலிருந்து 25,000 தீனார் இலாபத் தொகையைப் போருக்காகத் தனியாக எடுத்து வைத்து விட்டு, முதலீட்டுத் தொகையை உரிமையாளர்களுக்கு(த் திருப்பி)க் கொடுத்து விட்டார்கள். இந்தவொரு முக்கியமான காரணம் மட்டுமின்றி, இன்னும் சில விஷயங்களும் இருந்தன. அவற்றை(யும்) இந்த யுத்தத்திற்கான காரணங்களாகக் கூறலாம்.

பத்ர் யுத்தத்திற்குப் பிறகு மக்கத்தினர் சிரியாவுக்கு செல்வது சிம்ம சொப்பனமாகி விட்டிருந்தது. ஏனென்றால், மக்காவின் வியாபாரப் பாதை மதீனாவின் சுற்றுவட்டாரம் வழியாகச் சென்றது. குறைஷியர்களுக்குத் தங்களுடைய முந்தைய அநீதி, அக்கிரமம் காரணமாக அவ்வழியாகக் கடந்து செல்வது சிரமமாகிக் கொண்டே சென்றது. யுத்தங்கள் மற்றும் போர்ப் படைகளில் தோல்வியைத் தழுவியது, பத்ரில் குறைஷிய தலைவர்கள் கொல்லப்பட்டது மற்றும் எழுபது இணைவைப்பாளர்கள் சிறை பிடிக்கப்பட்டது போன்ற விஷயங்கள் அவர்களுடைய புகழ் மற்றும் சமூகத்தில் அவர்களது நிலைமை மீது அசிங்கமாகத் தெரியும் கறையாக அமைந்தன. அவர்கள் வீழ்ந்த தங்களது செல்வாக்கை மீட்டெடுப்பதற்காக, பழிவாங்க விரும்பினார்கள்.

ஓர் எழுத்தாளர் (உஹது யுத்தத்திற்கான) ஒரு காரணமாகப் பின்வரும் விஷயத்தைக் கூறியுள்ளார்:

குறைஷியர்களுக்கு சில திட்டங்களில் தோல்வி ஏற்பட்டது. அதன் காரணமாக அவர்களிடம் வேதனை, துயரம் மற்றும் பழிவாங்கும் உணர்வு மிகவும் அதிகரித்து விட்டிருந்தது. எவ்வாறாயினும், இன்னும் பல காரணங்கள் இருந்தன. அவற்றின் காரணமாக காஃபிர்கள் யுத்தம் புரிய ஆயத்தங்கள் மேற்கொண்டு வந்தனர். அக்கம் பக்கத்து கோத்திரங்களைத் தங்களுடன்

இணைத்துக் கொள்வதற்காக, சிலருக்குப் பேராசையையும், சிலருக்குத் தன்மான உணர்வையும், சுயமரியாதையையும் தூண்டி விட்டு தங்களுடன் இணைத்துக் கொண்டனர்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் தரப்பிலிருந்து ஒரு கடிதம் மூலமாக காஃபிர்களின் இந்த ஆயத்தங்கள் பற்றிய தகவல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் கிடைத்து விட்டது. மறுபுறம் யூதர்களும் நயவஞ்சகர்களும், ‘முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கிடைத்த செய்தி நல்ல செய்தியல்ல’ என்று பரப்பி விட்டார்கள். அவர்கள் அந்த செய்தியைத் திரித்து அதை நன்றாகப் பரப்பி விட்டு, முஸ்லிம்களை அச்சுறுத்த முழு முயற்சி செய்தனர். இதனால் ஒவ்வொருவரும் எச்சரிக்கையாகி விட்டார். மக்கத்து இணைவைப்பாளர்கள் போருக்காக வருகிறார்கள் என்று சலசலப்பு ஏற்பட்டது.

ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ரமலானின் இறுதியில் அல்லது ஷவ்வாலின் துவக்கத்தில் குறைஷியர்களின் படை மக்காவிலிருந்து புறப்பட்டது. படையின் எண்ணிக்கை மூவாயிரமாக இருந்தது. அதில் 700 காலாட்படை வீரர்கள், 200 குதிரைகள் மற்றும் 3000 ஒட்டகங்கள் இருந்தன. 15 பெண்களும் உடன் இருந்தனர். அவர்களில் அபூ சுஃப்யான், இக்ரிமா பின் அபீ ஜஹ்ல், சஃப்வான் பின் உமையா, காலித் பின் வலீத் மற்றும் அம்ர் பின் ஆஸ் ஆகியோரின் மனைவிமார்களும் அடங்குவர்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் குறைஷிய படையைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கொடுத்தார்கள். மேலும், அம்ர் பின் சாலிம் (ரலி) அவர்கள் மக்கத்து இணைவைப்பாளர்கள் புறப்பட்ட தகவலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எட்ட வைத்தார்கள். இது அபூ சுஃப்யானுக்குத் தெரிய வந்ததும் அவர் கலவரமடைந்தார்.

சஃப்வான் பின் உமையா, ‘நமது எண்ணிக்கை அதிகமாகும். நம்மிடம் போர்த் தளவாடங்களும் அதிகமாக உள்ளன. அவர்களுக்கு உயிரிழப்பையும் பொருளிழப்பையும் ஏற்படுத்தும் ஆற்றல் நமக்கு இருக்கிறது. ஆனால், அவர்களால் அது முடியாது’ என்று கூறினார்.

அபூ சுஃப்யானின் மனைவி ஹிந்த், ‘நீங்கள் எல்லாம் முஹம்மது {(ஸல்)} அவர்களின் தாயாருடைய கப்ரைத் தோண்டி எடுங்கள். மேலும், ஒவ்வொருவருக்கும் ஈட்டுத் தொகையாக அவர்களுடைய தாயாரின் ஓர் உடல் உறுப்பைக் கொடுத்து விடுங்கள்’ என்று கூறினார்.

இது விநோதமான ஷைத்தானிய ஆலோசனையாக இருந்தது.

குறைஷியர்கள், ‘இவ்வாறு அவர்கள் நம்முடைய மரணித்தவர்களின் கப்ருகளைத் தோண்டி எடுப்பார்கள்’ என்று கூறி இதில் முரண்பட்டார்கள்.

இந்தப் படையின் பெண்கள் பழிவாங்கும் உணர்வைத் தூண்டிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு இந்தப் படை முன்னேறிக் கொண்டே சென்றது. மறுபுறம் முஸ்லிம்கள் ஆயத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

சீரத் காத்தமுன்னபிய்யீனில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

குறைஷிய படையைப் பற்றிய செய்தியை அறிந்து வருவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இரு சஹாபாவை அனுப்பி வைத்தார்கள். மேலும், இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் எண்ணிக்கையையும் ஆற்றலையும் அறிந்து கொள்வதற்காக, மதீனாவின் மொத்த முஸ்லிம் குடியிருப்பை மக்கள் தொகைக் கணக்கெடுக்கச் செய்தார்கள். அப்பொழுது உயிர்வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை 1500 என்பது தெரிய வந்தது. அப்போதைய நிலைமைகள்படி இது பெரும் எண்ணிக்கையாகக் கருதப்பட்டது. சில சஹாபாவோ மகிழ்ச்சி உத்வேகத்தில், 'இப்பொழுதும் நமக்கு யாரைப் பற்றியும் கவலை இருக்க முடியுமா?' என்ற அளவுக்குக் கூறி விட்டார்கள்.

உஹது யுத்தத்திற்கான ஆயத்தத்திற்காக ஆலோசனை நடை பெற்றது. அப்பொழுதே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"இரவில் நான் ஒரு கனவு கண்டேன். ஒரு பசு அறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், எனது வாள், அதாவது, ஸுல்ஃபிகார் (எனப்படும் இரட்டை முனை கொண்ட) வாளின் கூர்மை மழுங்கி விட்டதாகக் கண்டேன்.

(இதர அறிவிப்புகளில், வாளின் கைப்பிடி உடைந்து போதல் மற்றும் கைப்பிடிக்கு அருகில் விரிசல் ஏற்படுதல் என்று கூறப்பட்டுள்ளது.)

பிறகு, நான் ஒரு வலிமையான கவசத்துக்குள் கையை நுழைப்பதாகக் காண்கிறேன்.

(ஓர் அறிவிப்பில், வலிமையான கவசத்தை அணிந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.)

மேலும், நான் ஒரு செம்மறியாட்டின் மீது அமர்ந்து செல்கிறேன்."

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதற்கு இவ்வாறு விளக்கமளித்தார்கள்:

பசுவைப் பொருத்தவரை, அதன் மூலம் என்னுடைய சில சஹாபா ஷஹீதாவார்கள் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனது வாளில் விரிசல் ஏற்படுவதைப் பொருத்தவரை, அதன் மூலம் எனது வீட்டாரில் அல்லது வம்சத்தைச் சேர்ந்தவர்களில் யாராவது ஒருவர் கொல்லப்படுவார் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வலிமையான கவசம் என்பதன் பொருள் மதீனா ஆகும். செம்மறியாடு என்பது, நான் எதிரிகளுக்கு உதவி செய்பவர்களைக் கொல்வேன் என்பதைக் குறிக்கிறது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தில் ஆலோசனை கேட்டார்கள். மேலும், கூறினார்கள்: நீங்கள் கருதினால், மதீனாவில் தங்குங்கள். பெண்களையும் குழந்தைகளையும் நாம் கோட்டைகளில் சேரத்து விடுவோம்.

மதீனா ஒரு கோட்டையைப் போன்று இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழங்கிய இதே ஆலோசனைதான், பெரும்

முஹாஜிர்கள் (ஹிஜ்ரத் செய்து வந்தவர்கள்) மற்றும் அன்ஸாரிகளின் (மதீனா வாழ் முஸ்லிம்களின்) ஆலோசனையாக இருந்தது.

எனினும், பத்ர் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியாமற்போன, தங்களுடைய உயிர்த்தியாகத்தால் மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெறுவதற்காக நிம்மதி இழந்திருந்த, முஸ்லிம் இளைஞர்களிள் ஒரு கூட்டம், ‘எதிரிகள் நம்மைக் கோழைகள் என்று கருதாதிருக்கும் பொருட்டு, தாங்கள் எங்களை மதீனாவை விட்டு வெளியே அழைத்துச் செல்லுங்கள்’ என்று மிகவும் நிர்பந்தித்துக் கேட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இளைஞர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். மேலும், ‘நாம் திறந்த மைதானத்தில் வெளியேறி காஃபிர்களை எதிர்கொள்வோம்’ என்று தீர்மானித்தார்கள். மேலும், ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள், ‘இறைவழியில் போர் புரியும் நோக்கத்தில் இந்த யுத்தத்தில் கலந்து கொண்டு நற்கூலி பெறுங்கள்’ என்று முஸ்லிம்களுக்கு பொது அறிவிப்பு செய்தார்கள்.

மீதமுள்ள விபரம் இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில் கூறினார்கள்:*

பாலஸ்தீனர்களுக்காக துஆக்கள் செய்து கொண்டே இருங்கள். போர் நிறுத்தம் முடிந்த பிறகு, மீண்டும் இவர்கள் மீது பாகுபாடின்றி குண்டுகள் வீசப்படும். மீண்டும் அப்பாவிகள் ஷஹீதாவார்கள். எவ்வளவு அநீதியிழைக்கப்படும் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். இவர்களின் எதிர்காலம் குறித்து வல்லரசுகளின் எண்ணங்கள் மிக பயங்கரமானவையாக உள்ளன. எனவே, இவர்களுக்காக அதிகம் துஆக்கள் செய்ய வேண்டிய தேவையுள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ் கருணை புரிவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ
اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)